# “தேச நிந்தனைச் சட்ட ஒழிப்பு அணி” (GHAH)

இந்த தேச நிந்தனைச் சட்ட ஒழிப்பு அணி, 128 குழுக்களின் ஆதரவில் உருவானது. சுவாராம், வழக்கறிஞர் இயக்கம், மலேசிய அம்னெஸ்தி இன்டெர்நேஷனல், இக்ராம் மற்றும் பல குழுக்கள் தலைமையில் செயல்படுகிறது. மக்களின் பேச்சு சுதந்திரம், எழுத்து சுதந்திரம், கல்விச் சுதந்திரம், ஊடக சுதந்திரம் ஆகியவை தேச நிந்தனைச் சட்டத்தின் மூலம் பறிக்கப்படுவதை எதிர்த்து தேசிய அளவில் பிரச்சாரம் செய்வதற்கே இந்த தேச நிந்தனைச் சட்ட ஒழிப்பு அணி (GHAH) உருவாக்கப்பட்டுள்ளது.

தேச நிந்தனைச் சட்ட ஒழிப்பு அணி (GHAH)-யின் கோரிக்கைகள்:

1. தேச நிந்தனைச் சட்டம் 1948 ஒழிக்கப்பட வேண்டும்.
2. இச்சட்டத்தின் கீழ்க் குற்றம் சாட்டப்பட்டவர்களின் குற்றங்கள் கைவிடப்பட்டு, அவர்களை விடுதலை செய்ய வேண்டும்.
3. இச்சட்டத்திற்கு மாற்றாக, இதே போன்ற கொடூரமான வேறு எந்தச் சட்டத்தையும் கொண்டு வரக்கூடாது.

வழக்கறிஞர் மன்றத்தின் ‘இளம் வழக்கறிஞர் செயற்குழு’வின் #தேச நிந்தனைச் சட்ட ஒழிப்பின் நோக்கம் GHAH-வுடன் ஒத்திருக்கும் பட்சத்தில், அவர்களும் ‘GHAH’-ன் பிரச்சாரத்திற்கு ஆதரவு அளிப்பர்.

---

மேல் விபரத்திற்கு, GHAH தொடர்புகொள்ள:-

| | | |
|---|---|---|
| முகநூல் | : | facebook.com/HapusHasutan |
| டுவிட்டர் | : | @HapusHasutan |
| மின் அஞ்சல் | : | GerakanHAH@gmail.com |
| முகவரி | : | 433A, Jalan 5/46, Gasing Indah, Petaling Jaya, 46 000 Selangor |
| தொலைபேசி | : | +603 77843525 |

GHAH

GERAKAN HAPUS AKTA HASUTAN

## “தேச நிந்தனைச் சட்டத்தை ஒழிப்போம்!!”



# தேச நிந்தனைச் சட்டம் 1948 - நீங்கள் அறிய வேண்டிய 10 தகவல்கள்:-

**1**

தேச நிந்தனை சட்டம் 1948, ஆங்கிலேயர் ஆட்சி காலத்தில் நம் நாட்டில் அறிமுகப்படுத்தப்பட்டது. இது நமது நாடாளுமன்றத்தில் இயற்றப்பட்ட சட்டமல்ல, பிரிட்டிஸ் அரசாங்கத்தால் இயற்றப்பட்டது. ஆனால், மலாயாவிற்குச் சுதந்திரம் கிடைத்தும், இன்றுவரை இச்சட்டம் தொடர்ந்து பயன்படுத்தப்பட்டு வருகிறது.

**2**

இச்சட்டத்தைப் பிரித்தானியர்கள் அறிமுகப்படுத்தியிருந்தாலும்; அந்நாடு இதை இரத்து செய்துவிட்டது. 1972-ம் ஆண்டு இச்சட்டம் அங்கு இறுதியாக பயன்படுத்தப்பட்டது.

**3**

ஆளும் அரசுக்கு எதிராக ஒருவர் பேசினாலோ அல்லது செயல்பட்டாலோ; இச்சட்டத்தின் கீழ்க் குற்றம் சாற்றப்படுவர். ஆளும் அரசுக்கு எதிராகப் பேசுவது, அவர்களை எதிர்க்க தூண்டிவிடும் ஒரு செயல் என்கின்றனர்.

**4**

“தேச நிந்தனையை தூண்டிவிடும் செயல்” என்றால் என்ன? மக்கள் மத்தியில் அரசர் மற்றும் அரசாங்கத்திற்கு எதிராக அதிருப்தியைத் தூண்டுதல். இனங்களுக்கிடையில் பகைமையை மூட்டுவது, மேலும் அரசமைப்புச் சட்டத்தில் உள்ள பாதுகாப்பு, அந்தஸ்து, சிறப்புரிமை, அதிகாரம், இறையாண்மை தொடர்பாக கேள்வி எழுப்புவதும் இதில் அடங்கும்.

**5**

“தேச நிந்தனையைத் தூண்டிவிடும் செயல்” என்பதன் வரையரை மிகப் பரவலானது. உதாரணத்திற்கு, அரசாங்கத்தையும் தலைவர்களையும் விமர்சிப்பது கூட தேசத் துரோகமாக வரையருக்கப்படுகிறது. ஆகையால், மக்களின் நேர்மையான குற்றச்சாட்டுகள் பல சமயங்களில் தேசத் துரோகச் செயலாக திசைதிருப்பப்பட்டு, அதிகாரிகளால் தவறாக பயன்படுத்தப்படுகிறது.

- குறைந்த வயது பெண் கற்பழிப்பு வழக்கு ஒன்றில் நாட்டின் தலைமை வழக்கறிஞரை விமர்சித்ததற்காக தேச நிந்தனைச் சட்டத்தின் கீழ் லிம் குவான் யேங் குற்றம் சாட்டப்பட்டார்.
- தேசிய முன்னணி அரசாங்கத்தின் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் ஆற்றிய உரையை வெளியிட்டமைக்காக, பத்திரிக்கையாளர் மேலன் அப்துல்லா தேச நிந்தனைச் சட்டத்தின் கீழ்க் குற்றம் சாட்டப்பட்டார். ஆனால், உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் மீது எந்தக் குற்றமும் சாட்டப்படவில்லை.
- 2009-ல் நடந்த பேராக் மாநில அரசியல் கிளர்ச்சியில், ‘பேராக் சுல்தான் தவறு செய்து விட்டார்’ என்று கருத்துரைத்ததால்; கர்ப்பால் சிங் தேச நிந்தனைச் சட்டத்தின் கீழ்த் தண்டிக்கப்பட்டார்.
- ‘அம்னோ *செலாக்கா* ’ என்ற வார்த்தையைக் கூறியதற்காக, ராயர் தேச நிந்தனைச் சட்டத்தின் கீழ்க் குற்றம் சாட்டப்பட்டார்.
- பேராக் அரசியல் கிளர்ச்சியின் நீதிமன்ற தீர்ப்பை விமர்சனம் செய்ததற்காகப் பேராசிரியர் அஸ்மி ஷாரோம் தேச நிந்தனைச் சட்டத்தின் கீழ்க் குற்றம் சாட்டப்பட்டார்.

**6**

இத்தேச நிந்தனைச் சட்டம், எதிர்க்கட்சி அரசியல்வாதிகள் மற்றும் ஆர்வலர்கள் மீது மட்டும் பயன்படுத்தப்படுவதில்லை. மாறாக, வழக்கறிஞர்கள், விரிவுரையாளர்கள், மதப் போதகர்கள் மற்றும் சாதாரண மக்கள் அனைவரின் மீதும் பயன்படுத்தப்படுகிறது. உதாரணத்திற்கு, ஒரு நாய் பயிற்றுநர் இச்சட்டத்தின் கீழ்க் கைது செய்யப்பட்டுள்ளார். மேலும், முகநூலில் கருத்துரைத்ததற்காக, ஒரு பள்ளி மாணவர் உட்பட, பலர் இந்த தேச நிந்தனைச் சட்டத்தின் கீழ் விசாரணை செய்யப்பட்டுள்ளனர்.

**7**

தேச நிந்தனை வழக்கில், குற்றம் சாட்டப்பட்டவர்கள், பிறரைத் தூண்டிவிடும் நோக்கத்தில் அதைச் செய்தார்கள் என்று நிரூபிக்க தேவையில்லை. அதேப் போல், இவர்களின் நடவடிக்கை மற்றவர்களைத் தூண்டி, தாக்கம் விளைவித்ததாகவும் நிரூபிக்க அவசியமில்லை. கூறியச் செய்தி உண்மையா? இல்லையா? என்பதும் முக்கியமல்ல. ஆனால், அவதூறு வழக்கில் இது வேறுபடுகிறது. அவதூறு வழக்கில், நாம் கூறிய செய்தியின் உண்மை, நம்மை தற்காத்துக் கொள்ள உதவும்.

**8**

குற்றம் சாட்டப்பட்டவர்கள் தான் கூறிய செயல்கள் தூண்டி விடும் தன்மை உள்ளதா என்பதை மட்டுமே நிரூபிக்க வேண்டும். ஆகையால், தேச நிந்தனைச் சட்டக் குற்றச்சாட்டுகள் பொதுவாகவே வெற்றியடைந்து, குற்றம் சாட்டப்பட்டவருக்கு தண்டனை வழங்கப்படும்.

**9**

தேச நிந்தனை சட்டத்தில் முதல் முறை குற்றம் சாட்டப்படுபவர்களுக்கு அதிகபட்சமாக RM5000 அபராதம் அல்லது 3 வருடத்திற்கும் மேற்போகாத சிறை தண்டனை, அல்லது இரண்டுமே வழங்கப்படும். இது தொடர்ந்தால், 5 வருடத்திற்கும் மேற்போகாத சிறை தண்டனை வழங்கப்படும்.

**10**

தேச நிந்தனை சட்டம் ஒழிக்கப்பட்டாலும், நாட்டின் அமைதியைக் காக்க வேறு பல சட்டங்கள் இருக்கின்றன. உதாரணத்திற்கு, குற்றவியல் சட்டம். பல்லின மக்களிடையே வெறுப்பை உண்டாக்கும் செயல்கள், மதக் கலவரங்கள் அல்லது பொது மக்களின் பாதுகாப்பிற்கு மிரட்டலாக அமையும் செயல்களுக்கு இச்சட்டத்தைப் பயன்படுத்தலாம்.